**Date: 24.07.26**

# தமிழகத்தில் மேலும் 2 டிஎன்ஏ ஆய்வகங்கள்

## உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசு தகவல்

**சென்னை, ஜூலை 23:** பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விரைந்து விசாரிப்பதற்காக, தமிழகத்தில் மேலும் இரு மரபணு பரிசோதனை ஆய்வகங்கள் (டிஎன்ஏ) அமைக்கப்பட உள்ளதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசு தெரிவித்தது.

திருவண்ணாமலைக்கு சுவாமி தரிசனம் செய்ய வந்த ஆந்திரத்தைச் சேர்ந்த இளம்பெண் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார். இந்தச் சம்பவத்தில் திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலைய காவலர்கள் சுந்தர், சுரேஷ் ராஜ் ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. திருவண்ணாமலை மாவட்ட மகளிர் சிறப்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள இந்த வழக்கை விரைந்து விசாரிக்கக் கோரி பாதிக்கப்பட்ட இளம்பெண் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்தார்.

அந்த மனுவில், பாலியல் வன்கொடுமை வழக்குகளை சட்டப்படி 2 மாதங்களில் முடிக்க வேண்டும் என தமிழகம் முழுவதும் உள்ள மகளிர் சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் அமர்வு நீதிமன்றங்களுக்கு உத்தரவிட வேண்டும்; மாநிலம் முழுவதும் உள்ள போக்ஸோ, மகளிர் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரங்களை சமர்ப்பிக்க உத்தரவிட வேண்டும் எனக் கூறியிருந்தார். இந்த வழக்கில், பதிவுத் துறை தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், தமிழகத்தில் புதிதாக 6 போக்ஸோ சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசுத் தரப்பில் ஆஜரான மாநில தலைமை குற்றவியல் வழக்குரைஞர் ஜான் சத்யன், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நீதிமன்றங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த போதுமான நிதி ஒதுக்கப்படும்.

தமிழகத்தில் சென்னை உள்ளிட்ட 3 இடங்களில் மரபணு பரிசோதனை ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன. குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகளின் விசாரணையை விரைந்து முடிப்பதற்காக மேலும் இரு மரபணு ஆய்வகங்கள் அமைக்கப்பட உள்ளதாகத் தெரிவித்தார்.

அப்போது நீதிபதிகள், குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகளின் விசாரணையைக் கண்காணிக்க உயர்நீதிமன்றத்தில் குழு செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தனர்.

பின்னர், சிறப்பு நீதிமன்றங்களில் ஏராளமான வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்த வழக்குகளை தினந்தோறும் என்ற அடிப்படையில் விசாரிக்க இயலாது. பெரும்பாலான வழக்குகளில் வழக்குரைஞர்கள்தான் விசாரணையை ஒத்திவைக்க வேண்டும் எனக் கோருகின்றனர். இந்த வழக்கில் அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் அனைத்தும் அமல்படுத்தப்படுவது உறுதி செய்யப்படும் எனத் தெரிவித்தனர்.

அதன்பிறகு இந்த வழக்கை தேதி குறிப்பிடாமல் தீர்ப்புக்காக ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.

**நீதிமன்ற உள்கட்டமைப்பு மேம்பாடுகள்: புதிய சிறப்பு நீதிமன்றங்கள்: நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவுபடுத்துவதற்காக, தென்காசி, ஈரோடு, திருப்பூர், திருச்சி, கழுக்குறிச்சி மற்றும் சென்னையில் ஆறு புதிய போக்சோ பிரத்யேக சிறப்பு நீதிமன்றங்களை மாநில அரசு அனுமதித்துள்ளது. கட்டம் கட்டமாகச் செயல்படுத்துதல்: சேலம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை உள்ளிட்ட அதிக வழக்குகள் நிலுவையில் உள்ள மாவட்டங்களில் நீதியை விரைவுபடுத்துவதை இந்தத் திட்டங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன.**

# ‘குஷா’ ஏவுகணை சோதனை வெற்றி



ஏவுதளத்திலிருந்து விண்ணில் சீறிப்பாயும் ‘குஷா’ ஏவுகணை.

**புது தில்லி, ஜூலை 23:** நீண்ட தூர இலக்கை துல்லியமாக தாக்கும் ‘குஷா’ ஏவுகணை வியாழக்கிழமை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

ஒடிஸாவை ஒட்டிய அப்துல் கலாம் தீவில் உள்ள ஏவுதளத்தில் இந்த நீண்ட தூர தரை-வான் ஏவுகணையின் சோதனையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ) மேற்கொண்டதாகப் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

இது ஏவுகணைகள், ஆளில்லா விமானங்கள், போர் விமானங்கள் என வான்வெளியில் பிற நாடுகள் நடத்தும் தாக்குதல்களை முறியடிக்கும் திறன் கொண்டது.

குஷா ஏவுகணைக்கான ரேடார்கள், கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் உள்ளிட்ட அனைத்து ஆயுத அமைப்புகளும் டிஆர்டிஓ மற்றும் அதன் ஆய்வகங்களால் தயாரிக்கப்பட்டுள்ளன.

குஷா ஏவுகணை இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சியின் முக்கிய மைல்கல் என பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்தார்.

**Key Features: The system is expected to have three interceptor variants — M1 with around 150 km range, M2 with around 250 km range, and M3 with around 350–400 km range — enabling multi-tier interception.**

**Threat Coverage: Project Kusha is designed to counter fighter aircraft, stealth platforms, drones, cruise missiles, precision-guided munitions and certain ballistic missile threats.**

**முக்கிய அம்சங்கள்: இந்த அமைப்பானது, சுமார் 150 கி.மீ. வரம்பு கொண்ட M1, சுமார் 250 கி.மீ. வரம்பு கொண்ட M2, மற்றும் சுமார் 350–400 கி.மீ. வரம்பு கொண்ட M3 என மூன்று இடைமறிப்பு வகைகளைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது பல அடுக்கு இடைமறிப்பைச் சாத்தியமாக்கும்.**

**அச்சுறுத்தல் வரம்பு: குஷா திட்டமானது போர் விமானங்கள், மறைமுகத் தளங்கள், ட்ரோன்கள், குரூஸ் ஏவுகணைகள், துல்லியமாக வழிநடத்தப்படும் வெடிமருந்துகள் மற்றும் சில பாலிஸ்டிக் ஏவுகணை அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது**


உணவில் செயற்கை நிறமூட்டிகளைப் பயன்படுத்தினால் நடவடிக்கை

**1. FSSAI Permitted Synthetic Dyes (Crucial for MCQs)**

**Under the Food Safety and Standards Authority of India (FSSAI) regulations, only 8 synthetic colors are officially permitted in specific foods: [1]**

- **Red: Carmoisine, Ponceau 4R, and Erythrosine.**
- **Yellow: Tartrazine and Sunset Yellow FCF.**
- **Blue: Brilliant Blue FCF and Indigo Carmine.**
- **Green: Fast Green FCF.**
- **Note: The maximum permissible limit for these legal synthetic colors is strictly 100 mg per kg (ppm) of food.**

**2. Forbidden/Illegal Dyes (Most Repeated TNPSC Questions)**

**Industrial, non-permitted dyes are frequently used as adulterants to make foods look vibrantly fresh. These are classified as severe health hazards and carcinogens: [1]**

- **Metanil Yellow: Frequently used to color turmeric powder, ladoos, and dhal. It is a highly toxic, prohibited industrial dye.**
- **Rhodamine B: A chemical dye illegally added to rose milk, cotton candy (panju mittai), and chili powder for a bright pink/red hue.**
- **Sudan Dyes (Sudan I to IV): Carcinogenic industrial dyes illegally used to enhance the red color of paprika, chili powder, and curry powders.**
- **Malachite Green: Frequently used to coat green vegetables (like green chillies and peas) to give them a fresh appearance.**
- **Lead Chromate: A chemical used to give an artificial bright yellow tint to turmeric roots or powder. [1]**

**3. Quick Laboratory Detection Tests**

**TNPSC often asks about the chemical tests used to spot food adulteration: [1]**

- **Turmeric Adulteration: Adding concentrated Hydrochloric Acid (HCl) to a turmeric sample turns it magenta or pink. If the color persists upon adding water, it confirms the presence of Metanil Yellow.**
- **Green Chilli/Peas Adulteration: Soaking a sample in water or rubbing it with a cotton ball soaked in liquid paraffin will leave a green stain if Malachite Green was used.**

**4. Natural Pigments vs. Sources**

**Questions may ask you to match natural, non-toxic coloring agents with their plant sources:**

- **Curcumin: Yellow pigment extracted from turmeric.**
- **Anthocyanin: Red, purple, or blue pigment found in grapes and berries.**
- **Carotenoids: Orange-yellow pigment sourced from carrots and pumpkins.**
- **Chlorophyll: Green pigment derived from leaves and spinach.**
- **Cochineal (Carminic Acid): A natural red color extracted from scale insects.**

# 2025–இல் சாலை விபத்துகளில் 1.83 லட்சம் பேர் உயிரிழப்பு

## தமிழ்நாட்டில் அதிக விபத்துகள்

**புது தில்லி, ஜூலை 23:** இந்தியாவில் சாலை விபத்துகளால் 2025–ஆம் ஆண்டில் நிகழ்ந்த 5.13 லட்சம் சாலை விபத்துகளில் 1.83 லட்சம் பேர் உயிரிழந்ததாக நாடாளுமன்றத்தில் மத்திய அரசு வியாழக்கிழமை தெரிவித்தது.

ஒரு மணி நேரத்துக்கு 21 பேர் சாலைவிபத்துகளில்உயிரிழப்பதாகவும் மத்திய அரசு தெரிவித்தது.

சாலை விபத்துகள், எத்தனால் கலப்பு பெட்ரோல், நெடுஞ்சாலைகள் தொடர்பாக மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி மக்களவையில் அளித்த எழுத்துபூர்வ பதிலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஒவ்வொரு மணி நேரமும் சராசரி 59 சாலை விபத்துகள் நிகழ்கின்றன. இதில் 21 பேர் உயிரிழக்கின்றனர். ஒட்டுமொத்தமாக 2025–ஆம் ஆண்டில் நிகழ்ந்த 5.13 லட்சம் சாலை விபத்துகளில் 1.83 லட்சம் பேர் உயிரிழந்தனர்.

**தமிழ்நாட்டில் அதிக விபத்துகள்:** மாநிலங்களைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் அதிகபட்சமாக 71,387 விபத்துகள் பதிவாகியுள்ளன. உத்தர பிரதேசத்தில் அதிகபட்சமாக 27,550 பேர் உயிரிழந்தனர்.

**தடுப்பு நடவடிக்கைகள்:** கல்வி, பொறியியல் (சாலைகள் மற்றும் வாகனங்கள்), அமலாக்கம் மற்றும் அவசர சிகிச்சை ஆகிய 4 தூண்களின்கீழ் சாலை விபத்துகளை தடுப்பதற்கான கொள்கையை மத்திய அரசு வடிவமைத்துள்ளது.

**எத்தனால் பெட்ரோலால் பாதிப்பில்லை:** இ15+ எத்தனால் பெட்ரோல் 3.5 ஆண்டுகளுக்கு மேலாகவும் இ19-20 எத்தனால் பெட்ரோல் 2.5 ஆண்டுகளுக்கு மேலாகவும் பயன்பாட்டில் உள்ளது. பல்வேறு தரச் சோதனைகளுக்குப் பிறகு மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறையுடன் இணைந்து எத்தனால் கலப்பு பெட்ரோல் (இபிபி) திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

பிரேஸில் மற்றும் பிற நாடுகள் எத்தனால் கலப்பு பெட்ரோலை பல ஆண்டுகளாகப் பயன்படுத்தி வருகின்றன. இந்தியாவில் இபிபி திட்டம் 2001–இல் சோதனை முறையில் அறிமுகமானது. இ5 எத்தனால் பெட்ரோல் 2006–இல் அறிமுகப்படுத்தப்பட்டது. 2013-14 வரை பெட்ரோலில் 1.53 சதவீதம் எத்தனால் கலக்கப்பட்டது. அதன் பிறகு தேவைக்கேற்ப படிப்படியாக இதன் அளவு அதிகரிக்கப்பட்டது.

எனவே, எத்தனால் கலப்பு பெட்ரோலால் வாகனங்களின் என்ஜின்கள், பயணிக்கும் தூரம் பாதிப்பதாக சமூக வலைதளங்களில் வெளியான தகவல்களில் உண்மையில்லை.

**4,809 கி.மீ. சாலை அமைப்பு:** நாடுமுழுவதும்4,809கி.மீ தொலைவுக்கு நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. 5,580 கி.மீ. தூரத்துக்கு சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன என அமைச்சரின் எழுத்துபூர்வ பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



Phone No: 73739 11577 & 73739 11133

# உச்சநீதிமன்றத்தில் 96,000 வழக்குகள் தேக்கம்

**புது தில்லி, ஜூலை 23:** உச்சநீதிமன்றத்தில் 96,000-க்கும் அதிகமான வழக்குகள் தேக்கமடைந்திருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நீதிமன்றங்களில் தேக்கமடைந்துள்ள வழக்குகள் குறித்து, நாடாளுமன்ற மாநிலங்களவையில் உறுப்பினர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு, மத்திய சட்டத் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால், தேசிய நீதித் துறை தரவுகளை அடிப்படையாக வைத்து எழுத்துபூர்வமாக பதிலை தாக்கல் செய்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நாடு முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் 5 கோடியே 64 லட்சம் வழக்குகள் தேக்கமடைந்துள்ளன. இதில் உச்சநீதிமன்றம், 25 உயர்நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட மற்றும் துணை நீதிமன்றங்களும் அடங்கும்.

## மத்திய அரசு

உயர்நீதிமன்றங்களில் மட்டும் 30 ஆண்டுகளுக்கும் கூடுதலாக 80,660 வழக்குகள் தேக்கமடைந்துள்ளன.

உச்சநீதிமன்றத்தை பொறுத்தவரை 96,000-க்கும் மேற்பட்ட வழக்குகள் தேக்கமடைந்துள்ளன. அதில் 26 வழக்குகள் 30 ஆண்டுகளுக்கும் மேலாகவும், 558 வழக்குகள் 20 ஆண்டுகளுக்கும் மேலாகவும் தேக்கமடைந்துள்ளன. 10,000-க்கும்மேற்பட்ட வழக்குகள், 10 ஆண்டுகளுக்கும் மேலாக விசாரணையில் உள்ளன.

தேக்கமடைந்துள்ள வழக்குகளை விரைந்து விசாரித்து தீர்வு காண வேண்டியது நீதித் துறையின் பணியாகும் என்று அர்ஜுன் ராம் மேக்வால் குறிப்பிட்டுள்ளார்.